# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:18 /பேரூ/2025**
**நாள் : 25.01.2025**

திரு. மெ. வெற்றிச்செல்வன்,
மேலூார்,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பொன்னம்பட்டி பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி வழி, பள்ளபட்டி, கதவு எண்.3/229 என்ற முகவரியை சேர்ந்த திரு. மெ. வெற்றிச்செல்வன் என்பவரது 26.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2024 அன்று பெறப்பட்டு, 18/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி வழி, பள்ளபட்டி, கதவு எண்.3/229 என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. மெ. வெற்றிச்செல்வன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 26.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்னம்பட்டி பேரூராட்சியில் நகரின் மக்கள் தொகை வீஸ்தீரணம் அடிப்படையில் கடந்த 2003-04ஆம் ஆண்டு சாதாரண கூட்ட நடவடிக்கையில் தீர்மானம் நிறைவேற்றி பொது சுகாதாரம் பயன்பாட்டிற்கு டிராக்டர் மற்றும் டிப்பர் வாங்குவதற்கும் அதற்கான ஓட்டுநர் பணியிடம் ஒன்று தோற்றுவித்த செலவினம் அனுமதி வேண்டி சென்னை பேரூராட்சி இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டது.

நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் தினக்கூலியாகவும், தொகுப்பூதியமாக ஊதியம் பெற்றும் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகவும் தொடர்ச்சியாகவும் எவ்விதமான பணிமுறிவு இல்லாமலும் வேலைப் பார்த்து வரும் பொது சுகாதாரம் பணியாளர்களை பேரூராட்சியில் நிரப்பவும், பணிவரன்முறை செய்யவும் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த அரசாணையினை அவமதித்து பணியாளர்களை ஏமாற்றி, அவர்களை வேலைக்கு சேர்ந்த நாள்முதல் அவர்களின் பணியினை ஒழுங்குமுறைப் படுத்தாமல் காலம் தாழ்த்தப்பட்டு தொழிலாளர்களின் அடிப்படை உரிமையை வழங்காமல் பறித்து உள் நோக்கத்துடன் செயல்பட்டு பேரூராட்சி நிர்வாகம் சட்டத்திற்கு புறம்பாகவும் முறைகேடாகவும் தனியார் இரண்டு நபர்களுக்கு 2017-18ஆம் ஆண்டில் இரண்டு துப்புரவுப் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. அப்பணியாளர்களின் ஆவணங்களை ஆய்வு செய்தும் விசாரணை செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மதுரை மாவட்டம், மேலூார் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. மெ. வெற்றிச்செல்வன் என்பவர் தனது 26.11.2024 நாளிட்ட மனுவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்னம்பட்டி பேரூராட்சியில் 2017-18ஆம் ஆண்டில் இரண்டு தனியார் நபர்களுக்கு முறைகேடாக தூய்மைப் பணியாளர் பதவியில் விதிமீறி நியமனம் செய்துள்ளனர் என புகாராக தெரிவித்து, இதுகுறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளார்.

மனுதாரர் தனது புகார் மனுவில் 2017-18ஆம் ஆண்டில் பொன்னம்பட்டி பேரூராட்சியில் முறைகேடாக 2 தூய்மைப் பணியாளர்களை பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என புகார் தெரிவித்துள்ளார். 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3)(c)ன்படி முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்யக்கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) Xxxxxx
(b) Xxxxxx
(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurance is said to have taken place.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நிகழ்வானது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 2017-18ஆம் ஆண்டில் நடைபெற்று உள்ளதால், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3)(c)ன்படி, மனுதாரரின் புகார் மனுவினை பரிசீலிக்க இயலாது என்பதால், இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமனற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 25ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. மெ. வெற்றிச்செல்வன்,
   3/229, பள்ளபட்டி,
   கொட்டாம்பட்டி – வழி, மேலூர் வட்டம்,
   மதுரை மாவட்டம் - 625 103

2. செயல் அலுவலர்,
   பொன்னம்பட்டி பேரூராட்சி,
   திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   (பெயரிடப்பட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (மு.கூ.பொ.)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை–600 032